செய்தி வெளியீடு எண்.401 நாள்.3.7.2007

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த குழு கூட்டத்தின் முடிவுகள்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் எட்டாவது கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (3.7.2007) காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு.டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு.கோ.க. மணி (பா.ம.க.), திரு.சி.கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), திரு.வை.சிவபுண்ணியம், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு. செல்வப் பெருந்தகை (விடுதலை சிறுத்தைகள்), திரு எச்.அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்), திரு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 25 லட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி களை கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. அந்த ஏற்பாட்டின்படி 24–6–2007 வரை 12 லட்சத்து 18 ஆயிரத்து 897 தொலைக் காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு அனுப்பப் பட்டு, அவற்றுள் 10 லட்சத்து 16 ஆயிரத்து 940 தொலைக்காட்சிப் பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 25 லட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளில் எஞ்சிய பெட்டிகள் அனைத்தும் வரும் நவம்பர் இறுதிக்குள் வழங்கிட தீர்மானிக்கப்பட்டது.

**2007–2008ஆம் ஆண்டுக்கு 30 லட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும், அதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை சர்வ தேச அளவில் கோருவதென்றும் ஒப்பந்தப் புள்ளிகளை ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டு, செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவு செய்வதென்றும் – 2006–2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக் குறியீடுகளையே இந்தக் கொள்முதலுக்கும் பின்பற்றுவதென்றும் இன்றையக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

* * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**